

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.1.2025) வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில், சென்னை, வில்லிவாக்கம், பாடி மேம்பாலத்தின்கீழ், சிவசக்தி காலனியில் சுமார் 3.93 ஏக்கர் பரப்பளவில் 53.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில், அமைக்கப்படவுள்ள சர்வதேச தரத்திலான கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்தின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், அ.வெற்றியழகன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.1.2025) வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ், திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கன்னிகாபுரம் பகுதியில் 59 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தனி கட்டடங்கள் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குடியிருப்புகளுக்கு குடிநீர் குழாய் மூலம் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த ஆய்வின்போது, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், அ. வெற்றியழகன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் செயல் இயக்குநர் செ. சரவணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.1.2025) வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில், ஆர்.கே.நகர் தொகுதிக்குட்பட்ட தண்டையார்பேட்டையில் 21.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.1.2025) வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை சார்பில், ஸ்டான்லி மருத்துவமனை சாலையில், 3.12 ஏக்கர் நிலப்பரப்பில் வாகன நிறுத்தும் தளம் மற்றும் 9 தளங்களுடன் 160 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு தொகுதிகளாக கட்டப்பட்டு வரும் 776 புதிய குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், அ.வெற்றியழகன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# நாகர்கோவில் மாநகராட்சி அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் முகாம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது!

கன்னியாகுமரி, பிப். 1 -

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி அலுவலகத்தில் வியாழன் தோறும் மாநகராட்சி மக்களின் கோரிக்கைகளையேற்று அதற்கு உடனடி தீர்வு கிடைக்கும் வகையில் மக்கள் குறைதீர்க்கும் முகாம் நடைபெற்று வருகிறது. அதன்படி மக்கள் குறை தீர்க்கும் முகாம் 30.01.2025, வியாழக்கிழமை அன்று கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் தலைமையில், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா முன்னிலையில் நடைபெற்றது.

முகாமில் வீட்டு வரி பெயர் மாற்றம், தொழில் வரி, வீட்டு வரி தொடர்பான புகார்கள், கழிவறை சீரமைப்பு, பிறப்பு இறப்பு சான்றிதழ், சுகாதார பணிகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் பொது மக்களிடம் இருந்து பெறப்பட்டது. இந்த மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்.

முகாமில் துணை மேயர் ம.மேரி பிரின்சி லதா, உதவி ஆணையர் பாலசுந்தரம், நகரமைப்பு அலுவலர் வேலாயுதம், உதவி செயற்பொறியாளர் ரகுராமன் உட்பட அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள், பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர். தொடர்ந்து அனைத்து துறை அலுவலர்களுடன் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

## அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்!

# ரூ.62 கோடியை விடுவித்து அரசாணை வெளியீடு!

சென்னை, பிப். 1 -

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திற்கு 62 கோடி ரூபாயை விடுவித்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு அனைத்து குக்கிராமங்களும் முழுமையாக, சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சி அடைவதை உறுதி செய்யும் விதமாக, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. முத்தமிழறிஞர் கலைஞரின் கனவுத் திட்டமான இந்த திட்டத்தின் மூலம் நீர் நிலைகள் புதுப்பிப்பு, தெருக்கள் அமைத்தல், மயான வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இந்த நிலையில், நடப்பாண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தை செயல்படுத்த, தமிழ்நாடு அரசு ஆயிரத்து 147 கோடியே 28 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தது.

இந்த நிலையில், நடப்பாண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திற்கு கடைசி தவணையாக 62 கோடியே 50 லட்சம் ரூபாய் விடுவித்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

